RESEARCH ARTICLE
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
DOI: 10.34256/irjt2544
OPEN ACCESS

# கலைஞரின் சட்டமன்ற உரையில் மாநில சுயாட்சி

**சா. செந்தில் கண்ணன் [அ, *], ப. தமிழரசி [அ]**

[அ] மொழியியல் துறை (தமிழ்த்துறை), கற்பகம் உயர்கல்விக் கழகம், கோயமுத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# State Autonomy in the Kalaignar's legislative Speech

**S. Senthilkannan [a, *], P. Tamilarasi [a]**

[a] Department of Linguistics Department (Tamil Department), Karpagam Academy of Higher Education, Coimbatore -21, Tamil Nadu, India.

* Corresponding Author: Senthilkannanbablma@gmail.com

Received: 25-06-2025
Revised: 18-09-2025
Accepted: 27-09-2025
Published: 03-10-2025

Check for updates

**ABSTRACT**

Kalaignar Karunanidhi, the Chief Minister, participated in the debate on the Governor's Address for the 19th time on 24-1-1990 and spoke. In the speech, the Dravida Munnetra Kazhagam government has done many things in the past as a sign that it has not forgotten those who fought for the country's freedom. Similarly, he spoke about the border restoration struggle, the good deeds that will be implemented for the sacrifices of those who fought as language guards to protect the language, the Mandal Commission report that will provide a way to provide reservation in the Union government's work, the state autonomy regarding the relations between the central and state governments, the Indian Administrative Service and Indian Police Service officers who are kept on the waiting list, the Cauvery issue, the farmers' issue, and the control of financial resources. Among these, Kalaignar's speech on state autonomy can be seen in detail in this article.

**Keywords:** laignar Karunanidhi, legislative Speech, Chief Minister, Freedom

## முன்னுரை

கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக 24-1-1990 அன்று 19ஆவது முறையாக ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினார். உரையில் நாட்டின் விடுதலைக்காக போராடியவர்களை மறந்தது இல்லை என்பதற்கு அடையாளமாக திராவிட முன்னேற்றக்கழக அரசு கடந்த காலங்களில் பல காரியங்களை செய்திருக்கிறது. அதைப்போலவே எல்லை மீட்பு போராட்டம், மொழி காவலர்கள் என்ற நிலையில் மொழியை பாதுகாக்க களம் புகுந்த அவர்களுடைய தியாகங்களுக்கு செயல்படுத்தும் நல்ல காரியங்களை பற்றியும், ஒன்றிய அரசு பணியில் இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யும் மண்டல் ஆணைய அறிக்கை பற்றியும், மத்திய மாநில அரசுகள் உறவுகள் பற்றிய மாநில சுயாட்சி பற்றியும், காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி இந்திய காவல் பணி அதிகாரிகள் பற்றியும், காவேரி பிரச்சனை பற்றியும் விவசாயிகள் பிரச்சனை பற்றியும், நிதி ஆதார கட்டுப்பாடு பற்றியும் உரையாற்றினார். இவற்றில் மாநில சுயாட்சி பற்றி கலைஞர் உரையை இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

## கலைஞரின் சட்டமன்ற உரையில் மாநில சுயாட்சி

தேசிய முன்னணி அரசு தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்ட இன்டர்-ஸ்டேட் கவுன்சில், அதையும் உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்கிற ஆர்வத்தோடு மத்தியிலே உள்ள தேசிய முன்னணி அரசு பணிகளை தொடங்கி இருக்கிறது. இது குறித்து நேற்றைய தினம் நம்முடைய நண்பர் திரு பூவராகவன் அவர்கள் இங்கே விளக்கமாக பேசியிருக்கிறார்கள். முதல் நாள் இந்த விவாதம் தொடங்கிய நேரத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் உரையாற்றிய உறுப்பினர்கள் இன்டெர் ஸ்டேட் கவுன்சிலை விமர்சித்து, அதை ஏதோ ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை போலவும் இப்போது இன்டெர்ஸ்டேட் கவுன்சிலை

ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதைப் போலவும் சில வினாக்களை எழுப்பினார்கள். இந்த மாமன்றத்தில் 1974 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல்முறையாக மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை நீங்கள் அனைவரும் தெளிவாக அறிவீர்கள். மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு காரணமாக அடிப்படையாக அமைந்த அறிக்கை ராஜமன்னார் குழு அறிக்கையாக இருந்தது என்பதையும், அந்த தீர்மானம் நிறைவேற்றிய போது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கை எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் அப்போது அனுப்பப்பட்டது. அன்றைய தினம் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அன்றைய பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (சிவஞானம். ம.பொ.,1999)

மாநில சுயாட்சி என்பது பயங்கரமான ஒன்று என்று கூறாமல் இது முதலமைச்சர்களுடைய மட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் விவேகத்தோடு ஒரு பதிலை அன்றைய தினம் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். அதற்கு தொடர் நடவடிக்கை இல்லையே தவிர மாநில சுயாட்சி என்கிற வார்த்தை பயங்கரமானது என்றோ அல்லது நாட்டைப் பிரிக்க கூடியது என்றோ அல்லது தேச விரோதமானது என்றோ அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொல்லவில்லை என்று உரையாற்றினார். இதன் மூலம் இன்டர்ஸ்டேட் கவுன்சிலை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர தேசிய முன்னணி அரசு பணிகளை தொடங்கி இருக்கின்றது என்ற உரையின் மூலம் இன்டர்ஸ்டேட் கவுன்சில் அமைப்பதில் கலைஞருக்கு இருந்த ஆர்வத்தை புரிந்து கொள்ள முடியும். திமுக எப்போதும் இன்டெர் ஸ்டேட் கவுன்சிலை ஏற்க தயாராக இருக்கிறது என்றும் 1974 இல் தமிழக சட்டமன்றத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றியதின் மூலம் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதில் திமுகவிற்கு இருந்த கொள்கை பிடிப்பையும் உறுதியையும் நாம் அறிய முடியும்.

மாநில சுயாட்சி என்றாலே தேசவிரோதமானது என்ற ஒரு கருத்தை நாடாளுமன்ற தேர்தல் நேரத்திலும் அதற்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் நேரத்திலும் இந்தியாவினுடைய பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் எல்லா இடங்களிலும் பேசினார்கள். இது தேசத்தை பிரிக்கக்கூடியது நாட்டை காட்டி கொடுக்கக் கூடியது வெளிநாட்டுக்காரர்களுக்கு நாட்டை துரோகம் செய்து காட்டிக் கொடுக்கக் கூடிய ஒன்று என்றெல்லாம் மிகக் கடுமையான பயங்கரமான வார்த்தைகளை பயன்படுத்தி மாநில சுயாட்சி என்கின்ற அந்த தத்துவத்தையே உடைப்பதற்கு ராஜீவ் காந்தி அவர்கள் அன்றைக்கு முயற்சித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்த ஒன்று என்பதற்கு இன்றைய தினம் இங்கே பேசிய உறுப்பினர் திரு பாலசுப்ரமணியம் அவர்கள் எடுத்து வைத்த வாதம், நாம் 1974 ஆம் ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்தின் முழு பகுதியையும் எடுத்து வைத்துக் கொள்ளாமல் அதிலே இரண்டு வரிகளை மாத்திரம் பிரித்து எடுத்துக் கொண்டது தன்னுடைய வாதத்திற்கு வலு சேர்த்துக்கொண்ட முயற்சி ஆகும்.

நம்முடைய 1974 ஆம் ஆண்டு தீர்மானத்தில் அந்த வரிகள் அரசியலமைப்பின் 263-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள மாநில குழு, அனைத்து மாநில குழு பயனற்றது, அதனால் எவ்வித பயணம் கிட்டாது என்று நாம் அதில் சொல்லியிருந்தாலும் கூட முன்பும் பின்பும் என்ன சொல்லி இருக்கிறோம் என்பதுதான் முக்கியம் என்று உரையாற்றி இருக்கிறார். இதன் மூலம் மாநில சுயாட்சி என்பது நாட்டிற்கு எதிரானது என அன்றைய ராஜூ தலைமையிலான காங்கிரஸ் பிரச்சாரம் செய்ததை எடுத்துக்காட்டுகிறார். (பிரேமா.மு.,2009)

## கலைஞர் அமைத்த ராஜமன்னார் குழுவின் அறிக்கை

எல்லா முதலமைச்சர்களையும் அல்லது அவர்களுடைய நியமனதாரர்களையும் கொண்டு அனைத்து மாநிலங்கள் குழு அமைக்கப்பட வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் சமப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் அதன் தலைவராக இருக்க வேண்டும். மைய அமைச்சர்கள் அந்த குழுவில் உறுப்பினர்களாக இருக்கத் தேவையில்லை. பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள், மாநிலங்களுக்கு இடையே போக்குவரத்து, நாணய செலாவணி ஆகிய குறித்து எடுக்கப்பட வேண்டிய எந்த ஒரு நடவடிக்கையும் மைய மாநில அரசர்களுடைய உறவை பாதுகாக்கின்ற வகையில் அதைப் பொறுத்து, அனைத்து மாநில குழு கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும். அதைப் போல மைய அரசு மேற்கொள்ளும் பொருளாதாரம், நிதி, பணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் விவாதிக்கும் வாய்ப்பையும் அந்த மாநில குழு, இன்டர்ஸ்டேட் கவுன்சில் கொண்டிருக்க வேண்டும். அரசியல் அமைப்பின் 263 வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள அனைத்து மாநில குழு பயனற்றது. அதனால் எந்த பயனும் கிட்டாது. எனவே அனைத்து மாநில குழுவினுடைய பரிந்துரைகள் மத்திய அரசையும் மாநில அரசுகளையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். பரிந்துரை எதுவும் ஏதேனும் காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டால் அந்த பரிந்துரை நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை நாடாளுமன்றத்தின் முன்பும் சட்டமன்றங்களின் முன்பும்

வைக்கப்பட வேண்டும் என்பது, இன்டர்ஸ்டேட் கவுன்சில் எப்படி மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற நிலையிலே 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றகழக ஆட்சிக்கு கொண்டு வந்து இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய வாசகங்கள் ஆகும் என்று உரையாற்றினார். (முரசொலிமாறன்.,2024) மேற்கண்ட கருத்துக்கள் அடங்கிய ராஜமன்னார் குழுவின் அறிக்கையை பார்க்கும்போது கலைஞர் மாநிலத்தின் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கருத்தில் மிக உறுதியாகவும் தெளிவாகவும் இருந்ததை நாம் காணலாம்.

## மாநில சுயாட்சியில் 253 வது பிரிவை குறிப்பிட்டு கலைஞர் ஆற்றிய உரை

நம்முடைய பிரதமர் வி.பி.சிங் அவர்கள் 263-வது பிரிவில் சொல்லப்பட்ட அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. அவர் கூட என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யலாம் என்று மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்த கடிதத்தில் இன்டெர்ஸ்டேட் கவுன்சில் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. அதிலேயே என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்பதை நீங்கள் எழுதி அனுப்பினீர்களேயானால் அவற்றையெல்லாம் நாங்கள் சீர்தூக்கி பார்த்து உடனடியாக முதலமைச்சர்களை எல்லாம் அழைத்து ஒரு மாநாடு கூட்டி அதிலே உங்களுடைய கருத்தைக் கேட்டு அதில் திருத்தங்களோடு அந்த 263-வது பிரிவை நடைமுறைப்படுத்த ஏதுவாக இருக்கும் என்று அவர்கள் எழுதி இருக்கின்றார்கள். நான் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன் 23-5-1989 இல் இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை வைத்தபோது நான் ஒன்றை குறிப்பிட்டேன். பிப்ரவரி திங்களில் புது தில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மத்திய மாநில உறவுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளேன். அவ்வமயம் சட்டம், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மத்திய மாநில அரசின் உறவுகள் குறித்து ஒன்றுக்கொன்று தொடர்பான முறையில் தொகுத்து விவாதிக்க முன்வருவது அவசரமும் அவசியமும் ஆனது ஆகும் என்று விளக்கியுள்ளேன். இதன் தொடர்பாக அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவின் கீழ் அனைத்து மாநிலங்களின் குழுவை இன்டர்டேட் கவுன்சில் உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் அத்தகைய குழுவின் அமைப்பு செயல்முறைகள் பற்றி பிரதமர் அவர்கள் அப்போது திரு ராஜீவ் காந்தி பிரதமர் மாநில முதலமைச்சர்களுடன் வெகு விரைவில் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி உள்ளேன் என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டேன். அப்போது அது கவனிக்கப்படவில்லை. இப்போது கவனிக்கப்பட்டிருக்கிறது. இதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால் மத்திய மாநில உறவுகளைப் பற்றி அறிய மத்திய அரசு ஏற்கனவே அமைத்த சர்க்காரியா கமிஷனுக்கு எல்லா கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. அப்படி அனுப்பப்பட்ட போது அன்றைக்கு இருந்த அதிமுக அரசின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. அந்த கருத்து எப்படி அமைந்தன என்றால் கவுன்சில் தேவையே இல்லை 263-வது பிரிவியை எடுத்து விடலாம் என்று அதிமுக ஆட்சியினால் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. 1985 ஆம் ஆண்டு இந்த கருத்துக்கு ஒரு காரணம் சொன்னார்கள். அந்த குழு மத்திய மாநில அரசுகள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும் என்ற அளவிலே இல்லாத காரணத்தால் இந்த 263-வது பிரிவியை எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். பிறகு மீண்டும் காரணம் கேட்டு சர்க்காரியா கமிஷன் அதிமுக அரசை வணங்கியபோது 1985 ஆம் ஆண்டு ஒரு கருத்தை எழுதினார்கள். அதுதான் வேடிக்கை 35 ஆண்டுகளாக இந்த 263-வது பிரிவின் கீழ் இன்டர்டேட் கவுன்சில் அமையவில்லை. ஆகவே இனியும் அமையத் தேவையில்லை என்று முன்பிருந்த அதிமுக அரசு ஒரு அருமையான கருத்தை எழுதி அப்படியே அந்த பிரிவை அரசியல் சட்டத்தில் இருந்து எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் அதிமுக அரசு இப்படி எழுதியது இன்டெரெஸ்டேட் கவுன்சில் உள்ள பிரிவையே எடுத்துவிடலாம் என்று. ஆனால் அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக வெளியிட்ட அவர்களது தேர்தல் அறிக்கையில் மத்திய மாநில அரசுகளின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண இன்டர்ஸ்டேட் கவுன்சில் அமைத்திட பாடுபடுவோம் என்று தெரிவித்தார்கள். இது தேர்தல் அறிக்கை 1985 ஆம் ஆண்டு இன்டெர் ஸ்டேட் கவுன்சில் தேவையில்லை என்று எழுதி 263-வது பிரிவியே எடுத்து விடலாம் என்று எழுதினார்கள். ஆகவே அந்த பதிலை படித்தார்களோ படிக்கவில்லையோ ஆனால் இப்படி இவர்களுடைய தேர்தல் அறிக்கையில் இன்டர்ஸ்டேட் கவுன்சில் அமைக்க பாடுபடுவோம் என்று அதிமுக கட்சியின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது. (கருணாநிதி.மு.,2022)

இவ்வளவு முரண்பாடுகளுக்கு இடையில் இன்டர்ஸ்டேட் கவுன்சிலை பற்றி அந்த கட்சி தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிற அதே நேரத்தில் நாம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இன்டர்ஸ்டேட் கவுன்சில் தேவை, அதற்காக 263 வது பிரிவில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து அந்த முடிவு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு முதலமைச்சர்களை கூட்டி பிரதமர் வி.பி.சிங் அவர்கள் கலந்தாலோசிக்கக்கூடிய ஒரு நல்ல நிலையை இந்த இன்ட்ரஸ்ட் கவுன்சில் மட்டத்தில் உருவாக்கி இருப்பதற்கு நான் இந்த மாமன்றத்தில் அவருக்கும்

மத்திய அரசுக்கும் நன்றி கூற பெரிதும் கடன் பட்டிருக்கிறேன் என்று உரையாற்றி, தன்னுடைய மாநில சுயாட்சி பற்றிய உரையை நிறைவு செய்திருக்கிறார்.

## முடிவுரை

கலைஞர் சட்டமன்றத்தில் ஆளுநர் உரைகளின் மீது பல பொருள்கள் குறித்து உரையாற்றி இருந்தாலும் மேற்காண் முறையை காணும் போது கலைஞர் மாநில சுயாட்சி பற்றி கொண்டிருந்த உறுதியும் தொலைநோக்கு பார்வையும் புலப்படுகிறது. மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சியும் தான் இந்தியா போன்ற துணைக்கண்டத்துக்கு உண்மையான மக்களாட்சியாக திகழும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தினார். மற்ற மாநில முதல்வர்களையும் அதற்காக அணிதிரட்டினார். மாநிலங்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு ராஜமன்னார் குழுவை மத்திய மாநில அரசுகளின் உறவை ஆராய அமைத்தது இவ்விஷயத்தின் அகில இந்திய அளவில் மிக முக்கியமான முன்னெடுப்பாகும். கலைஞர் ஒலித்த மாநில சுயாட்சி குரல் இன்றும் இந்தியாவெங்கும் எதிரொலித்துக் கொண்டுதான் இருக்கிறது. மத்திய அரசானது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதும் அதிகளவு மாநில அரசின் தொடர்புடைய துறைகளை பொதுப்பட்டியலிலிருந்து நீக்கி மாநில பட்டியலுக்கு மாற்றுவதே மக்களாட்சியை பொருள் உள்ளதாக்கி மாநில சுய ஆட்சியை அர்த்தமுள்ளதாக மாற்றும்.

## துணைநூற்பட்டியல்

பிரேமா.மு.,(2009) கலைஞரின் சட்டமன்ற உரைகள் - ஓர்ஆய்வு, சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை.

கருணாநிதி.மு.,(2022) மாநில சுயாட்சி, ஆழி பதிப்பகம், சென்னை.

முரசொலிமாறன்.,(2024) மாநில சுயாட்சி, சூரியன் பதிப்பகம், சென்னை

சிவஞானம். ம.பொ.,(1999) மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு, பூங்கொடி பதிப்பகம், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License